1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-9-1987-ல் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 36.30 லட்சம் நிதியை இதற்கு ஒதுக்கீடு செய்து, டிசம்பர் 1988-க்குள் பணியை முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நாங்கள் உத்திரவிட்டு இருக்கிறோம். விரைவில் பணி முடிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வர இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அப்படி வருகின்றபோது இந்த அணைக்கட்டுத் திட்டம் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரோடு பேசி முடிவு எடுக்கப்படும்.

திருமணஞ்சேரியில் அணை கட்டும் திட்டம்.

30—(*வினா எண் 13785) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமணஞ்சேரியில் அணை கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பு எவ்வளவு?

(இ) இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பலன் அடையும்?

(ஈ) கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், வெள்ளாள விடுதி, ஆத்தாங்கரை விடுதி, துவார், மானிய வயல் ஆகிய இடங்களில் செக்டாம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 301 இலட்சத்தில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது.

(இ) சுமார் 7559.35 ஏக்கர்.

(ஈ) இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக, புதுக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி போன்ற தொகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயம் செய்கின்ற பெருங்குடி மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் இருக்கிற காரணத்தால் இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறி விப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவிலே ஆரம்பிக்க வேண்டும் என்று அரசும் கருதுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இருசாரார் இருவிதமான உணர்வுகளைச் சொல்கிற காரணத்தால், ஏற்கனவே சட்ட மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மத்தியிலே பேசி, இதற்கு ஒரு வழி முறையை நாங்கள் செய்து வைத்திருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் மத்தியிலே அந்தக் கருத்தைக் கேட்டு இருக்கிறோம். விரைவிலே இந்தத் திட்டம் தொடங்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில், வெள்ளாள விடுதி, ஆத்தாங்கரை விடுதி, துவார், மானிய வயல் போன்ற பகுதிகளில் செக்டாம் அமைப்பதன் மூலமாகத் திருமணஞ்சேரியில் அணை கட்டுகின்ற திட்டத்திற்கு, அங்கேயிருக்கிற மக்கள் ஒத்துழைப்பு தருகிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார் களா? அதன் மூலமாக இந்தத் திட்டம் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் அந்த ஸ்தலத்திற்குச் சென்று, ஆய்வு செய்து, பொது மக்களுடைய கருத்துக்களைக் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் மிக வேகமாக இந்தத் திட்டத்திற்கு ஒப்புதலை அரசாங்கம் அளிக்கும்.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணஞ்சேரியிலே அக்கரையாற்றின் குறுக்கே அணையைக் கட்டுகின்ற திட்டம் குறித்து தொடர்ந்து 40 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியில் உள்ள மக்களால், அந்த மாவட்டத்தில் உள்ள மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை அரசிடமிருந்து ஆவலோடு அந்த மக்கள் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பலமுறை அந்த அணையைக் கட்டுவதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பியபோதும், அரசிடமிருந்து நிதி போதவில்லை என்ற அந்தப் பதிலை மட்டும் எதிர்பார்த்து, அந்த அணை கட்ட முடியாமல் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் இரண்டு பிரிவினராகச் சேர்ந்து, அங்கும் இங்கும் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதிகாரிப் பெரு மக்கள் அந்தப் பகுதிக்கு வந்து ஆய்வு செய்கின்றபோது மானிய வயலில் அணையைக் கட்டுவதற்குச் சாத்தியம் இல்லை என்றும், திருமணஞ்சேரியில் அணையைக் கட்டுவதற்கான சாத்தியக்கூறு இப்போது இருப்பதாகச் சொல்லி, இந்தத் திட்டத்திற்கான மதிப் பீடு தயாரித்து, அரசுக்கு அது வந்திருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே தொடர்ந்து இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டாவது இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த அணையைக் கட்டக்கூடிய திட்டத்தை நிச்சயமாகச் செய்வார்களா, செய்வ தற்கு உறுதி அளிப்பார்களா, என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி பொது மக்களிடத்திலே கேட்கிற நேரத்திலே, மேலே கட்ட வேண்டும்

[1987 நவம்பர் 10

என்ற கோரிக்கையைச் சொன்னார்கள். ஆகவே, கீழே கட்டுவதற்குத்தான் அரசினுடைய குறிப்பிலே, எங்களுடைய ஆய்விலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பு மக்களுடைய பிரச்சினைகளை முடிப்பதற்காக, காம்ப்ரோமைசாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து விட்டு, கீழே இருப்பவர்களுக்கு அணையைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று அந்த உணர்வைச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1.—

வழக்குரைஞர்களுக்கும் காவல்துறை பணியாளர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறு மீதான வழக்குகள்.

வினா 247—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வக்கீல்களுக்கும் காவல்துறை பணியாளர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டு பதிவான வழக்குகள் எத்தனை?

விடை—

தமிழகத்தில் 1980 முதல் 1985 வரை (31—3—1985 முடிய) காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே எழுந்த தகராறு குறித்து மூன்று சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இது தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு சம்பவம் திருச்சி கோட்டாட்சித் தலைவரின் காவல் துறை நிலையான ஆணை எண். 145-ன்படி (P. S. O. 14 5) விசாரணைக்கு தெரிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS